**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.274/15**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.சேகர், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திரு.சேகர் |
| வயது | - | 50 |
| தந்தை/கணவர் பெயர் | - | த/பெ.செல்லபெருமாள் |
| கிராமம் | - | வடபூண்டிபட்டு |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

10.09.2024

**பி.சா.1.**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி. என்னிடம் காட்டப்படும் பிராமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். தாவா சொத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். **(07.07.1949 தேதியிட்ட ஆறுமுக முதலியார் என்பவருக்கு முத்தம்மாள் மற்றும் அப்பாதுரை எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (20.10.1969 அன்று பாக்கியம்மாள் என்பவர் பாச்சம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் பி.வா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (28.07.1993 அன்று பாச்சம்மாள் 2ம் பிரதிவாதி சேகர் என்பவருக்கு எழுதி கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(08.05.2002 தேதியிட்ட பாச்சம்மாள் என்பவர் எழுதி வைத்துள்ள பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தின் அசல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (29.03.1971 தேதியிட்ட மாதவ முதலியார் என்பவருக்கு செல்லபெருமாள் எழுதிகொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (28.07.1993 தேதியிட்ட 1ம் பிரதிவாதி கணபதி என்பவருக்கு பாச்சம்மாள் எழுதி கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (12.12.1984 தேதியிட்ட பாச்சம்மாள் என்பவருக்கு சிவகாமியம்மாள் மற்றும் ஒருவர் எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (05.07.1999 தேதியிட்ட தணிகைவேல் என்பவருக்கு மாதவன் என்பவர் எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (செல்லபெருமாள் என்பவரின் வாரிசு சான்று நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (பட்டா எண்.990-க்கான நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (01.01.1947 முதல் 31.12.1996 வரையிலான வில்லங்க சான்று, 01.01.1947 முதல் 31.12.1966 வரையிலான வில்லங்கசான்று, 01.01.1967 முதல் 31.12.1986 வரையிலான வில்லங்கசான்று, 01.01.1987 முதல் 08.08.2017 வரையிலான வில்லங்க சான்றுகள் அசல் (4 எண்ணிக்கைகள்) பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (08.05.2002 முதல் 30.08.2017 வரையிலான வில்லங்க சான்று அசல் பி.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது) சம்மந்த முதலியார் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள மனைவரி பட்டா எண்.74 மற்றும் அதனுடனான படிவம்-1 அசல் பி.வா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (பாச்சம்மாள் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள மனைவரி பட்டா எண்.127 அசல் பி.சா.ஆ.14 ஆக குறியீடு

**செய்யப்படுகிறது) (2ம் பிரதிவாதி சேகர் பெயரில் வழங்கப்பட்டுள்ள நத்த நிலவரி திட்ட தூய சிட்டா அசல் பி.வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (செல்லபெருமாள் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா அசல் பி.வா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (செல்லபெருமாள் மற்றும் 2 நபர்கள் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா அசல் பி.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (அசல் வழக்கு எண்.107/16 வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (அசல் வழக்கு எண்.107/16 வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

வாதி அழைத்தும் ஆஜர் இல்லை. வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு குறித்து ஆட்சேபனை தெரிவிக்க எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே ஆவணங்கள் ஆட்சேபனையின்றி குறியீடு செய்யப்படுகிறது.

4 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.